**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.538/2018**

**Prosecution Witness : 3**

| | | | | |
|---|---|---|---|---|
| **Name** | : சுப்பிரமணி | **Caste** | : | |
| **Father's Name** | : ராமர்பிள்ளை | **Calling** | : | சிறப்பு சார்பு ஆய்வாளர் (ஓய்வு) |
| **Village** | : திண்டுக்கல் | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **62/2025** |
| | | **Dated** | : | **07.10.2025** |

**07.10.2025**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 2 **திரு. சுப்பிரமணி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா. 3** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தமிழ்நாடு காவல் துறையில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று குடும்பத்துடன் திண்டுக்கல்லில் குடியிருந்து வருகிறேன். கடந்த 22.06.2017ம் தேதி திண்டுக்கல் தாடிக்கொம்பு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது அன்றையதினம் காலை 5.30 மணிக்கு நானும், சார்பு ஆய்வாளர்

சூரியதிலகராணி, சிறப்பு சார்பு ஆய்வாளர் செல்வராஜ், தலைமைக் காவலர் 116 அரியவேல் ஆகியோருடன் தாடிக்கொம்பு காவல் எல்கைக்கு உட்பட்ட குளத்தூர் சந்தனவர்த்தினி ஆற்றில் மணல் திருட்டு நடப்பதாக வந்த தகவலைப் பெற்று அங்கு சென்று சுடுகாட்டின் அருகே கண்காணித்தபோது தார் ரோட்டில் வந்த TN 57 L 1372 டாடா 407 டிப்பர் லாரியை மறித்து சோதனை மேற்கொண்டபோது லாரியை ஓட்டி வந்த நபரை விசாரித்தபோது அவர் குளத்தூரைச் சேர்ந்த முத்துப்பாண்டி என்றும், தான் சந்தனவர்த்தினி ஆற்றில் இருந்து 1 யூனிட் மணலை திருடி விற்பனைக்காக எடுத்து செல்வதாக சார்பு ஆய்வாளரிடம் கூறினார். லாரியின் பின்புறம் ஒரு யூனிட் மணல் இருந்ததைப் பார்த்தோம்.

2) லாரியில் இருந்த மணலை தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் சார்பு ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி சாட்சியாக நானும் தலைமைக் காவலர் அரியவேலும் கையொப்பம் செய்தோம். பின்பு வழக்கு சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து வழக்கு பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையது. (**1வது கையொப்பம் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பொதுவாக நாங்கள் ரோந்து செல்லும்போது எங்களது உயர் அதிகாரியிடம் எழுத்துப்பூர்வமாக அனுமதி பெற்றுதான் செல்வோம் என்றால் சரிதான். எனக்கு குளத்தூர் ஆற்றில் மணல் அள்ளுவது சம்பந்தமாக எவ்வாறு தகவல் கிடைத்தது என்றால் சார்பு ஆய்வாளர் தகவல் சொன்னார். குளத்தில் கைப்பற்றிய மணல் எந்த திசையில் இருந்து அள்ளப்பட்டது என்றால் மேற்கு திசை. எதிரியிடம்

இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதா என்றால் இல்லை. அத்தாட்சி கையால் எழுதப்பட்டதா அல்லது தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் கையால் எழுதப்பட்டது. நான் மேற்படி சம்பவம் குறித்து எனது உயர் அதிகாரியிடம் தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் ரோந்து சென்றேன் என்பதற்கான ஆவணங்கள் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள் சொன்ன நேரத்தில் அத்தாட்சி தயார் செய்யவில்லை என்றாலும், வழக்குச் சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பந்தமாக உயர் அதிகாரியிடமோ, கனிம வள அதிகாரியிடமோ தகவல் கொடுக்கவில்லை என்றால் சரிதான். புள்ளி விவர கணக்கிற்காக எனது உயர் அதிகாரி கேட்டுக்கொண்டதற்கிணங்க தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை**</u>

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C — Digitally signed by DINESH KUMAR C Date: 2025.10.07 16:15:01 +0530

Judicial Magistrate No.II

Dindigul.